ஆக்கம் :

**S.RAMANATHAN** BA, MA(Econ), M.Ed, PGDE

T.P : 077 161 1571

**Grade 12**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர) மாதிரிப் பரீட்சை, 2021**
**General Certificate of Education (Adv.Level) Model Examination, 2021**

| | | |
|---|---|---|
| **பொருளியல் II**<br>**Economics II** | **21 T II** | **புதிய பாடத்திட்டம்**<br>**New Syllabus** |
| மூன்று மணித்தியாலம்<br>Three hours | | மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்<br>Additional Reading Time - 10 minutes |

**இந்த மாதிரி வினாப்பத்திரத்திலுள்ள வினாக்கள் ஆசிரியரின் அனுமதியின்றி மீள பிரசுரித்தல், பிரதி எடுத்தல், அல்லது வேறு முறையில் முறையற்ற விதத்தில் கையாளுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். மாணவர்களின் கற்றல் தேவைக்காக மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும்.** – ஆசிரியர் –

**அறிவுறுத்தல்கள் :**

★ வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்பொழுது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

★ உப பிரிவுகள் **'அ'**, **'ஆ'** ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

★ வரைபுத்தாள்கள் வழங்கப்படும்.

## உப பிரிவு 'அ'

(இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

01) 1. பொருளியலானது இயற்கை விஞ்ஞானத்திலிருந்து வேறுபடும் விதத்தை எடுத்துக் காட்டுக.

2. அ. இலவச பண்டங்கள் பொருளாதார பண்டங்களாக மாறும் விசேட சந்தர்ப்பங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

ஆ. இயற்கை வளங்களை எல்லையற்று பயன்படுத்துவதனால் சர்வதேச ரீதியில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுக.

3. பொருளாதார வளங்களின் வகைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

4. மூலதனம் - முதலீடு என்பவற்றுக்கிடையில் நீர் காணும் முக்கிய வேறுபாடுகள் இரண்டினைத் தருக.

அ. வளங்களின் வினைத்திறனைத் தீர்மானிக்கும் காரணிகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ. உலகில் காணப்படும் பல்வேறு பொருளாதார முறைமைகள் எவை?

5. அ. சமூக சந்தை பொருளாதாரம் என்றால் என்ன?

ஆ. பொருளாதார முறைமைகளை வேறுபடுத்தும் முக்கிய நியதிகள் எவை?

02) 1. “மனித தேவைகளை பூர்த்தி செய்வன பொருளாதாரம் பண்டங்களாகும்” இக்கூற்றை ஏற்றுக் கொள்வீரா? உமது விடைக்கான விளக்கம் தருக.

2. அ. பொருளாதார நடத்தை என்பதை வரையறை செய்க.
   ஆ. இயற்கை வளப்பயன்பாட்டை தீர்மானிக்கும் காரணிகள் இரண்டினைத் தருக.

3. அ. வட்டி எனும் வெகுமதியைப் பெறுகின்ற உற்பத்திக் காரணியின் பண்புகள் நான்கு தருக.
   ஆ. ஊழிய வினைத்திறனை மேம்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

4. அ. சந்தர்ப்ப செலவை வரைவிலக்கணப்படுத்துக.
   ஆ. சந்தர்ப்ப செலவு பூச்சியமாகும் இரண்டு சந்தர்ப்பங்களைத் தருக.

5. சந்தை பொருளாதாரம் மற்றும் திட்டமிட்ட பொருளாதாரம் ஆகியவற்றில் பொருளாதார அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வேறுபடும் விதத்தை எடுத்துக்காட்டுக.

03) 1. அ. கேள்வி விதி என்றால் என்ன?
   ஆ. கேள்வி விதியை முன்வைக்கக்கூடிய பல்வேறு முறைகள் எவை?

2. கேள்வி சமன்பாட்டினை வரிப்படம் ஒன்றின் உதவியுடன் விளக்குக.

3. கேள்வித்தொகை மாற்றம், கேள்வி மாற்றம் ஆகிய எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாட்டை தெளிவுபடுத்துக.

4. அ. நிரம்பல் மாற்றத்திற்கான காரணிகள் நான்கினைத் தருக.
   ஆ. விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி குணகத்தை கணிப்பதற்கான சூத்திரம் யாது?

5. அ. சந்தை சமநிலை மாற்றம் என்றால் என்ன?
   ஆ. நிறைபோட்டி சந்தையில் ஏற்படும் மாற்றங்களினால் சந்தை சமநிலை விலை நிலையாக இருக்கும் இரு சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.

04) 1. குறித்த பண்டத்தின் நிரம்பலை தீர்மானிக்கும் காரணிகள் எவை?

2. அ. மிகை நிரம்பல், மிகைக் கேள்வி என்பவற்றை வரிப்படம் ஒன்றில் காட்டுக.
   ஆ. “சந்தை சமநிலையில் விலை கீழ்நோக்கி தள்ளப்படும்” இக்கூற்றை ஏற்கிறீரா? உமது விடைக்கான நியாயம் தருக.

3. அ. பாணுக்கான கேள்விக்கோடு இடதுபுறம் நகர்ந்தது. இதற்கு பொறுப்பாக அமையக்கூடிய இரண்டு காரணிகளைத் தருக.
   ஆ. புறநடை கேள்வி ஏற்படக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

4. அலகு கேள்வி நெகிழ்ச்சி என்பதனால் கருப்படுவது யாது?

5. அ. நிரம்பல் சமன்பாடுகளைக் குறிப்பிட்டு, அங்கு காணப்படக்கூடிய புள்ளி நெகிழ்ச்சி குணகத்தின் பெறுமதியை பற்றி கருத்துரைக்க.
   ஆ. நிரம்பல் கோட்டின் வழியே புள்ளி மேல்நோக்கி அசைவுறுகையில் நிரம்பல் நெகிழ்ச்சி குணகத்தின் மாற்றம் எவ்வாறானதாக அமையலாம்?

05) 1. விலைக்கேள்வி நெகிழ்ச்சி நடைமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற நான்கு சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.

2. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியின் பயன்பாடுகள் இரண்டு தருக.

3. குறித்த பண்டத்தின் நிரம்பலை தீர்மானிக்கும் காரணிகளில் "தொடர்புடைய பண்டங்களின் விலை" என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.

4. குறித்த பண்டத்தின் நிரம்பல் கோட்டினை இடது புறம் நகர்த்தக்கூடிய காரணிகள் நான்கினை எடுத்துக்காட்டுக.

5. நிரம்பல் விதியை விளக்கக்கூடிய மாற்று முறைகளைத் தருக.

## உப பிரிவு 'ஆ'

(இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

06) 1. குறித்த பண்டம் தொடர்பான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| P | Qd | மிகை நிரம்பல் தொகை |
|---|---|---|
| 40 | 320 | -160 |
| 70 | 200 | 80 |

அ. நிரம்பல் அட்டவணையை தருக.

ஆ. கேள்விக்கோடு, நிரம்பற்கோடு ஆகியவற்றை வரைபுத்தாளில் வரைக.

இ. சந்தை சமநிலை விலை, சந்தை சமநிலை தொகை என்பவற்றைக் குறிப்பிடுக.

2. அ. சந்தை சமநிலையில் நுகர்வோர் மிகையின் அளவு யாது?

ஆ. சந்தை சமநிலையில் உற்பத்தியாளர் மிகையின் அளவு யாது?

இ. சந்தை சமநிலையில் காணப்படும் பொருளாதார மிகையைத் தருக.

ஈ. சந்தை சமநிலையில் உற்பத்தியாளரின் மொத்த வருமானம் யாது?

3. இங்கு நிரம்பலாளர் மீது அலகு வரியாக ரூபா 10 விதிக்கப்படுகிறது.

அ. வரியின் பின்னரான நிரம்பல் கோட்டை வரைக.

ஆ. புதிய சந்தை சமநிலை விலை, சந்தை சமநிலை தொகை ஆகியவற்றைத் தருக.

இ. அரசுக்கு கிடைக்கும் மொத்த வரி வருவாயின் அளவு யாது?

4. அ. வரியின் பின் நுகர்வோர் மிகையின் பெறுமதி எவ்வளவு?

ஆ. வரியின் பின் உற்பத்தியாளர் மிகையின் பெறுமதி எவ்வளவு?

இ. வரியினால் இடம்பெற்ற சமூக நலனிழப்பு பெறுமதியைத் துணிக.

5. அ. வரி விதிப்பு காரணமாக நுகர்வோர் மிகையில் ஏற்பட்ட மாற்றம், உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம் என்பவற்றைத் தருக.

ஆ. அலகு வரி காரணமாக ஏற்பட்ட பொருளாதார விளைவுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

07) ஒரு பொருள் மீது அலகுவரி விதிக்கப்பட்ட பின்னரும், அதற்கு முன்னரான நிலைமைகளையும் பின்வரும் வரைபடம் காட்டுகிறது.




| | | | |
|---|---|---|---|
| i. | ஆரம்ப சந்தை சமநிலை விலை ............................... | புதிய சந்தை சமநிலை விலை ...................................... | |
| ii. | ஆரம்ப சந்தை சமநிலை தொகை .............................. | புதிய சந்தை சமநிலை தொகை ................................... | |
| iii. | ஆரம்ப நுகர்வோன் மிகை ............................... | புதிய நுகர்வோன் மிகை ................................... | நுகர்வோன் மிகையில் ஏற்பட்ட இழப்பு - ............... |
| iv. | ஆரம்ப உற்பத்தியாளன் மிகை .................................. | புதிய உற்பத்தியாளன் மிகை ....................................... | உற்பத்தியாளன் மிகையில் ஏற்பட்ட இழப்பு - ................. |
| v. | ஆரம்ப பொருளாதார மிகை ................................... | புதிய பொருளாதார மிகை ..................................................... | |
| vi. | அலகுக்கான நுகர்வோன் வரித்தாக்கம் ....................... | நுகர்வோன் வரித்தாக்கம் - .................................................... | |
| vii. | அலகுக்கான உற்பத்தியாளன் வரித்தாக்கம் ........................ | உற்பத்தியாளன் வரித்தாக்கம் - ....................................................... | |
| viii. | அலகுக்கான வரி ................................................ | மொத்த வரித்தாக்கம் - ...................................................... | |
| ix. | சமூக நலனிழப்பு - ................................................. | | |

08) 1. சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கம் தலையிடும் பிரதான முறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

2. ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாடு எச்சந்தர்ப்பத்தில், எப்பொருட்கள் மீது விதிக்கப்படுகின்றன?

3. பூரண நெகிழ்வற்ற கேள்வி நிலைமையின் போது உற்பத்தியாளர் மீது வரிவிதிக்கப்படுமாயின் அங்கு வரித்தாக்கம் எவ்வாறு அமைந்து காணப்படும் என்பதனை வரிப்படத்தில் காட்டுக.

4. அ. சந்தையில் காணப்படும் இரு சக்திகள் எவை?

 ஆ. இச்சக்திகளுக்கிடையில் காணப்படும் வேறுபாடு விலையின் மீது எவ்வாறான தாக்கத்தை உண்டாக்கும்?

5. அ. சந்தையில் விலைப்பொறிமுறை இயக்கமற்றுப்போகையில் பண்டங்களை பங்கீடு செய்ய பயன்படுத்தப்படும் விலையல்லா மூலகங்கள் எவை?

 ஆ. ஆகக்குறைந்த விலையை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் சில குறிப்பிடுக.

09) 1. பொருளியலில் உற்பத்திக்கோட்பாட்டுடன் தொடர்பான குறுங்காலம், நீண்டகாலம் ஆகிய எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாட்டை தொழிற்பாட்டு வடிவில் எடுத்துக்காட்டுக.

2. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்றால் என்ன?

3. குறுங்கால உற்பத்திச் செயற்பாடுடன் தொடர்புடைய பின்வரும் மூன்று வடிவங்களை வரைவிலக்கணப்படுத்துக.

 அ. மொத்த உற்பத்தி    ஆ. சராசரி உற்பத்தி    இ. எல்லை உற்பத்தி

4. அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு தோன்றுவதற்கான காரணங்கள் எவை?

5. பொருளியலில் உற்பத்திச் செலவு என்பதனை தெளிவுபடுத்துக.

10) 1. பொருளியல் இலாபம் - கணக்கியல் இலாபம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

2. நிலையான செலவில் அடங்கும் பிரதான கூறுகள் யாவை?

3. அளவுத்திட்ட சிக்கனம் ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் தருக.

4. நீண்டகாலத்தில் பேரளவுச்சிக்கனம் என்பதன் பொருள் யாது?

5. நிலையான அளவுத்திட்ட விளைவு எப்பொழுது செயற்படும்?